

சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் 139வது வட்டம், ஜாபர்கான்பேட்டை கெங்கையம்மன் கோவில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு நாளை முன்னிட்டு தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ண மூர்த்தி முன்னிலையில் பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்தார். இந்த நிகழ்ச்சியில் தா.மோகன்குமார், எம்.எஸ்.ஹரிபாபு, டி.கே.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், ஜி.கே.ராமச்சந்திரன், வீ. மதிவாணன், த.மணி, மு. கதிரவன், பொ.பரத்குமார், டி.எஸ்.முருகன், ஆ.அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, டி.எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ண குமார், சா.மு.மோகன், ஜி.எம்.பிரபு, கொடி பாலா, து.முரளி, சி.டி.காசிநாதன், வி.சபரி, இரா.சத்யா, ம.திலிப்பன், மற்றும் பலர் கலந்து கொண்டனர். பாபு எல்லப்பன் நன்றி கூறினார். தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.



அண்ணா நினைவு நாளையொட்டி மயிலை கபாலி கற்பகாம்பாள் கோவிலில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் பொதுமக்களுக்கு நலஉதவி வழங்கி மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்ச்சி தங்க பாண்டியன், தொகுதி பார்வையாளர் கோவி.லெனின், பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, 124 அ வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு, அ.ரேவதி எம்.சி. வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு உணவருந்தினர்.

### தலைமை என். சந்திரன் எம்.சி. – ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்: 3 ஆயிரம் பேருக்கு நல உதவிகள்!

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்! டி.ஆர். பாலு எம்.பி. – ஆர்.எஸ். பாரதி பங்கேற்பு!

சென்னை, பிப்.7

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் மார்ச்சு ஒன்னு கழகத் தலைவர் முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி பன்னிரண்டாவது மண்டல குழு தலைவர் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் எம் சந்திரன் ஏற்பாட்டில் 7.2.2026 இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்டேட் பாங்க் காலனி அண்ணா சிலை அருகில் நங்கநல்லூரில் நடைபெறுகிறது.

இதில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன், கண்ட்ரோல்மென்ட் நகர செயலாளர் டி. பாபு, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் டி வந்தே மாதரம், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர்ஜி.கே. விவேகானந்தன் (எ ) ரவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆலந்தூர் தெற்குப் பகுதி நிர்வாகிகள் ஜி.சுந்தர்ராஜன் ஆர்.பாபு ஏ. சாலமோன் எம்.சி., கே. ராஜேஸ்வரி சத்யா இ.ரமேஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் 3000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்.

இதில் டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மீ.அ. வைத்திலிங்கம், பி.டி. சி.ஜி. செல்வராஜ், பத்மபிரியா, எம். எஸ்.கே. இப்ராஹிம், ஆர். டி. பூபாலன், இரா.பாஸ்கரன், கீதா ஆனந்தன், கோல்ட் டி.பிரகாஷ், பி. சாய் ஜெயகாந்த், ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், கே.ஆர். ஆனந்தன், வி. டில்லிபாபு, கோ. கோடீஸ்வரன், ஐ.அழகேசன், எஸ்.ஜெபா, எம். சையத் அபுதாஹிர், உலகநாதன், டி.ஜேசுதாஸ், கே. ஆர். ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன், ஏ.ஆர். சரவணன், டி.ரவி, மா.கோ. கருணாநிதி, பா. கிருஷ்ணமூர்த்தி, கே.பி. முரளி கிருஷ்ணன்,எம்.ஆர். ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 167 ஆவது வட்டச் செயலாளர் ஜெ. நடராஜன் நன்றியுரை ஆற்றுகிறார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

# கும்மிடிப்பூண்டி அரசு பொது மருத்துவமனை- ரூ.3.50 கோடியில் புதிய கட்டிடம்!

கும்மிடிப்பூண்டி, பிப். 7-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி. கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் அரசு பொதுமருத்துவமனையில் ரூபாய் 3 கோடியே 50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன் குத்துவிளக்குயேற்றி கட்டிடத்தை திறந்து வைத்தார். கும்மிடிப்பூண்டி பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றி தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம். மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அவர்களுக்கும் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. ஜெ. கோவிந்தராஜன் அவர்களுக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ். இரா.அறிவழகன், சகிலாஅறிவழகன், மு.கேசவன், மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், கே.ஆறுமுகம். ஜி.சுமன், எஸ்.எம். திருநாவுக்கரசு, கே.ஜி. நமச்சிவாயம், டி. மஸ்தான், வேதச்சலம், எஸ். உதயகுமார், அப்துல்கரீம், க.பரத்குமார், பா. பரத்குமார். கே.என்.பழனி, டி.கே.ராஜா, எஸ்.கௌதம், இளவரசன், அர்ஜீன், கருணாகரன். உமாபதி, சூப் முனியாண்டி, ரெட்டம் பேடு.செந்தில், ரவி, முரளி, யுகேந்தர். கெட்னமல்லி.முரளி, கோட்டக்கரை கிருஷ்ணன், பிரகாஷ், உதயன், லாரன்ஸ். சித்திக், சண்முகம், இ.எம். ராஜேஷ், பா ஆனந்தராஜ், ஏ.பார்த்திபன், ஜெ.என். எஸ்.பாண்டியன், ரவிந்திரன். தமிழ்சாதிக், முத்து, ஏழுமலை, மனோகரன், சாண்டில்யன். பார்த்திபன், போண்டாசிவா, அஜீத், பார்த்தசாரதி, அருண்மொழி, காமராஜ். பா.அறிவழகன், கே.கதிரவன், ஏ.காமாட்சி, டி. காளி, குப்பன். எஸ்.ஜெயசந்திரன், மீனாட்சி. கண்ணன்கோட்டைகோபால், ராஜ்குமார், இ.கோதண்டன், அங்கமுத்து. நந்தகோபால். நித்தியானந்தம். சுப்பிரமணிராஜா, கே.சி. ராஜா, கல்விசெல்வம், சரவணன், ரவி, சிவராம ரெட்டி, மாதர்பாக்கம் சீனிவாசன், பாதிர்வேடு மூர்த்தி, சகாதேவன், மருத்துவத்துறை இணை இயக்குனர் அம்பிகா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் விஜயன், அரசு தலைமை மருத்துவ அதிகாரி சுஜித்ரா, கும்மிடிப்பூண்டி செயல் அலுவலர் பாஸ்கரன், ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# திருவொற்றியூர் மத்திய பகுதி தி.மு.க. சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

### எஸ்.மோகன் பங்கேற்பு ! பகுதி செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் அறிக்கை!

சென்னை, பிப். 7-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்திய பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைபாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம், மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலையில் இன்று (07.2.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் காமராஜர் சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகம், மணலியில் நடைபெறுகிறது.

இதில் மாநில வர்தகர் அணி துணைத்தலைவர் தொகுதி பார்வையாளர் தி.நகர். எஸ்.மோகன் பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

அது சமயம் வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) 11.02.2026 அன்று நடைபெறும் சென்னை, மண்டல BLA-2/BLC/BDA/ வாக்குசாவடி குழுவினருக்கான என் வாக்குசாவடி வெற்றி வாக்குசாவடி பயிற்சி மாநாடு 2) கழக ஆக்க பணிகள்.

குறிப்பு: நாள் : 11.02.2026 புதன்கிழமை மாலை 5.00 மணி அளவில் அவைத்தலைவர் வா.முத்துசாமி தலைமையில் பகுதி கழக அலுவலகத்தில் பயிற்சி கூட்டம் நடைபெறுகிறது.

மேற்கண்டவாறு திருவொற்றியூர் மத்தியபகுதி செயலாளர் 2-வது மண்டலக்குழு தலைவர் ஏ.வி. ஆறுமுகம், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னையில் நாளை நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில்

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தினர் திரளாகப் பங்கேற்க முடிவு!

### நா.சண்முகநாதன் அறிக்கை!



புதுக்கோட்டை, பிப்.7

ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு தமிழ்நாடு புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் அறிவித்த தமிழக முதல்வருக்கு ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் சார்பில் சென்னையில் பிப்ரவரி 8 அன்று நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் ஆசிரியர், அரசு ஊழியர்களின் பிரதான கோரிக்கையான 22 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வந்த பங்கேற்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து விட்டு தமிழ்நாடு அரசின் உறுதி அளிக்கப்பட்ட ஓய்வு திட்டத்தை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

22 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு காணும் வகையில் ஓய்வு திட்டத்திற்கான அறிவிப்பினை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது ஒட்டுமொத்த ஆசிரியர்கள் ,அரசு ஊழியர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தேர்தல் அறிக்கையில் சொன்னவாறு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்கள்,அரசு ஊழியர்களின் வாழ்வாதார கோரிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்.

இந்த அறிவிப்பானது பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தி உள்ளது.

பணி நிறைவு பெற்றவர்களும் பயன்பெறும் வகையில் கருணைத்தொகைஅறிவித்திருப்பதையும் வரவேற்று மகிழ்கிறேன்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனையும் அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்தையும் மனதில் கொண்டு, தொலைநோக்குப் பார்வையுடனும் நடைமுறை சாத்தியங்களுடனும் கூடிய வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் 22 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி, பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான ஓய்வூதியத்தையும், பணப் பயன்களையும் பெற வழிவகுக்கும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள இந்த தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தினை, அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒருமனதாக வரவேற்பதோடு சென்னையில் ஜாக்டோ ஜியோ பேரமைப்பின் சார்பில் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பிப்ரவரி 8-ஆம் தேதி நடைபெறும் நன்றி அறிவிப்பு மாநாட்டிற்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவிக்க வேண்டுகிறேன்.

தன் வாழ்நாளில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய கலைஞர் அவர்களின் வழியில் தொடர்ந்து ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலராக தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இருந்து வருகிறார்.

எனவே உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக தமிழ் இனம் காக்க பாடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவிக்க அனைவரும் அலைகடலென சென்னை நோக்கி புறப்படுவீர் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் மாநிலப் பொதுச்செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தனது செய்திக் குறிப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கழகத்தலைவர் – முதல்வர் பிறந்தநாள் விழா! எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

# 131வது வட்டக் கழகம் சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு!

### மயிலை த.வேலு – தமிழச்சி தங்கபாண்டியன் – ஜெ.கருணாநிதி – கே.ஏழுமலை பங்கேற்பு!

சென்னை, பிப். 7-

'131'வது வட்டம் சார்பில், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 08-02-2026 (ஞாயிற்றுக்கிழமை) மதியம் 1.00 மணியளவில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி வடபழனியில் உள்ள துரைசாமி சாலையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சி வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி., திருமதி.ரத்னாலோகேஸ்வரன் எம்.சி., கோ.சு.மணி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், வட்ட, பாக ஒருங்கிணைப்பாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட கழக முன்னணியினர்கள் கலந்துகொள்கின்றனர்.



கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், வார்டு எண்.99, கீழ்ப்பாக்கம் சாஸ்திரி நகரில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழாவில் அப்பகுதி வாழ் மக்களோடு கலந்து கொண்டார்.

### சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்

# வே.தேவேந்திரன் மகள் செல்வி டி.லக்ஷணா மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, பிப். 7

சென்னை மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வே.தேவேந்திரன் மகள் செல்வி. டி.லக்ஷணா அவர்கள் (06.02.2026) நேற்று காலை உடல் நலக்குறைவால் மறைவெய்தினர். என்ற செய்தி கேட்டு சென்னை மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மிகுந்த அதிர்ச்சியும், சொல்லொணாத் துயரமும் அடைந்தோம்.

மகளை இழந்து வாடும் தேவேந்திரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் கழகத்தின் சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், கல்விக் குழு உறுப்பினருமான ரமணி மாதவன் தலைமையில் 11 வது மண்டலக் குழுத் தலைவர், பகுதிக் கழகச் செயலாளர் நோளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் 2024 2025 மூலதன நீதியின் கீழ் ரூபாய் 1.06 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட ஆலப்பாக்கம் பெருமாள் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைத்தார். நிகழ்வில் 147 வது வட்டக் கழகச் செயலாளர், மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன், வட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.